**செ.வெ.எண்: 66** **நாள்: 31.01.2018**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

## மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்வு நாள் முகாம்

மாற்றுத்திறனாளிகளின் குறைகளை கேட்டு களைந்திடுவதற்காக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 02.02.2018 அன்று காலை 10.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைதீர்க்கும் நாள் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அன்றைய குறைதீர்க்கும் நாள் சிறப்பு கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்களது குறைகளை எழுத்து பூர்வமாகவோ அல்லது நேரடியாகவோ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தெரிவித்து தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணலாம். எனவே புதுக்கோட்டை மாவட்டதைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் இந்த சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**